உ

சிவமயம்



யாழ் தச்சன் தோப்பை பிறப்பிடமாகவும் வவுனியாவில் வசித்து
வந்தவரும் தற்போது பிரான்சை வதிவிடமாகவும்
கொண்டவருமாகி

அமரர்

# செல்வி. கனக்ரத்தினம் சத்தியவனிதா

அவர்களின்

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட்ஸ விஸ்வ பிரமனே நமக



[redacted]

[redacted]

யாழ் தச்சன் தோப்பை பிறப்பிடமாகவும்
வவுனியாவில் வசித்து வந்தவரும் தற்போது
பிரான்சை வதிவிடமாகவும் கொண்டவருமாகிய

அமரர்

செல்வி. **கனகரத்தினம் சத்தியவனிதா**

அவர்களின்

சிவதப்பேறு குறித்த

# நினைவு மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்





அளவில்லா அன்பை பொழிந்து
எங்களை வழிநடத்திய தெய்வமே
ஆருயிராய் நீ இருந்து அழகாக வாழவைத்தாய்
அன்பமாய் நீ எங்களுடன் வாழ்ந்தாயே
எதற்காக ஈசனடி சென்றடைவதற்கோ.
உன் நினைவில் நாம் இருந்தோம்
விழி உறங்க முடியாமல் ஊராரும்
உன் நினைவில் மிளாத்துயரினிலே எழுத்து
கலங்க வைத்து ஏட்டுரை கூறி வைத்தாய்.
ஏற்றங்கள் நீ கொடுத்தாய் எல்லோர் - மனதிலும்
ஐயம் தெளிய வைத்தாய் அன்பு செல்வமே
வானுரை தெய்வத்துள் கலந்து விட்ட என்
மகளை ஊணினை உடுத்தி
உள்ளன்புடன் ஆத்மா சாந்திக்காக
கண்ணீருடன் இந்நூலை சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



இங்கனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவு



அன்னையின் மடியில்
1980.12.05

ஆண்டவன் அடியில்
2010.07.08

அமரர்

# செல்வி. கனகரத்தினம் சத்தியவனிதா

### திதி நிர்ணயப் பாடல்.

விகிர்தி ஆணியில் .............. தசமத்திதியில்
பக்குவம் சேர் சத்தியவனிதா சென்றார் – இப்புவியில்
வாழ்ந்தது போதுமென வானுலகு தானடைந்தார்
தாழ் சடையான் பாதம் தொழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







உ

*சிவமயம்*

*திருச்சிற்றம்பலம்*

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து!

## தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாயென் நெஞ்சந்துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

நாடகத்தால் உன்னடியார்போல் நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் உடையானே



## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோகியசுந்தரனே.

## திருப்பல்லாண்டு

தாயைத் தாளறவீசிய சண்டிக்கிவ் வண்டத்தொடுமுடனே
பூதலத்தாரும் வணங்கப் பொற்கோவிலும் பாசனமுமருளிச்
சோதிமணி முடித்தாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணின் வளர் மணிக்கொழுந்தை
தேனக்க மலர்க்கொன்றை செஞ்சடையார் சீர்தொடுக்குக்
கானத்தின் எழுபிறப்பை கண்களிப்ப கண்டார்கள்.



## திருநீற்றுப்பதிகம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்திலு ள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் நீறு

## திருப்புகழ் .

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியதனாடையும் மழுமானும்
அசைந்த தோடும் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்தசூரன் இளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துடர் கட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

## வாழ்த்து

வானுலகும் வையகமும் வாழ மறைவாழ
பாண்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞத்னமது ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்விப்பாம்

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் விராட் விஸ்வ பிரம்ம குலத்தில் உதித்த

# செல்வி கனகரத்தினம் சத்தியவனிதா

அவர்களின்

வாழ்க்கை வரலாறு

இயற்கை எழில் கொஞ்சும் ஈலத்திரு நாட்டின் யாழ் தச்சந்தோப்பை சேர்ந்த அமரர் கனகரத்தினம் கைலாசபதி தம்பதிகளின் இல்லற வாழ்க்கைப் பயனாக மூன்றாவது அன்பு புதல்வியாக சத்தியவனிதா பிறந்தார்.பின் சிறு வயதில் அன்பு மலலை பேச்சை பொழிந்தார். தனது பள்ளி பருவ வாழ்க்கையை யாழ்.. நாவற்குழி மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் பின்னர். ஓமந்தை மத்திய மகாவித்தியாலயம் தனது கல்வியை முடித்தார். பின்னர் 1998ம் ஆண்டு குருமன்காட்டில் வசிக்கும் போது தனது அப்பாவை இழந்தார். பின் 2000ம் ஆண்டு தோணிக்கல்லில் வசித்தார் அப்போது தனது சகோதரியை இழந்தார். பின்னர் தன் குடும்பத்தை தாமே வழி நடத்த வேண்டுமென எண்ணி. கண்டி வீதியில் அமைந்த ஆடைத் தொழிற்சாலையில் 5 வரும காலமாக பணியாற்றி வந்தார். பின் தன் குடும்ப நிலைக்காக கடல் கடந்து பிரான்ஸ் என்னும் நாட்டைச் சேர்ந்தார். இங்கே தன் அக்கா, அத்தானின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தார். அங்கே தமிழ் பாடசாலையில் ஆசிரியராகவும் (Stornk Frish . இல் கணக்காளர்) ஆகவும் பணியாற்றி வந்தார். தனது அக்காவின் பிள்ளைகளுடன் சிறு பிள்ளையாகவே தானும் அன்பு மலலைகள் பொழிந்தால். தான் அயல் நாட்டில் இருந்தும் அம்மா வசிப்பதற்கு வீடும் கட்டி வைத்தால் எல்லா சந்தோசத்தையும் தனது குடும்பத்துக்காக அள்ளி கொடுத்திருக்கும் போது தடீர் னெ வந்த கொடுர மாரடைப்பு நோயால் இவ்வுலகை விட்டு தனது அப்பா அக்காவுடன் இறைவனடி சேர்ந்தார்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயார் புலம்பல்

அன்பு மகளே உன் முகத்தை
பார்க்கலாம் என்று கொழும்புக்கு ஓடோடி வந்தேன்.
சட்ட திட்டம் என்னை வழிமறித்து விட்டது.
என் அன்புச் செல்ல மகளே - உண்னை
10 மாதம் சுமந்து பகல் இரவாய் விழித்திருந்து
வளர்ந்த என் அன்பு மகளே. - எனக்கு
ஆண் பிள்ளை கோல் என்னை கஸ்டப்படாமல்
பார்த்து வந்து என் அன்புச் செல்வமே - உம்முடைய
தியாகங்களை சொல்லவும் எழுத்ததால் எழுதவும் முடியாது.
உன் முகத்தைக் காண்பது எப்போது.?
உன் குரலைக் கேட்பது எப்போது?
ஆல மரம் சரிந்தது போல் சரிந்து விட்டாயே மகளே நீ
யாருக்கும் தீங்கு நினைக்காத உனக்கு
ஏனம்மா இந்த சோதனை.?
இப்பிறவி எடுத்து என் வயிற்றில் பிள்ளையாய்
அவதரித்ததிற்கு ஆண்டவருக்கு நன்றி சொல்கின்றேன்.
தாயே சக்தி அம்மன் உருவெடுத்து வேப்பிலைக்
கைப்பிடித்து காத்த தெய்வமே எனது மகளே
உன் நல் வார்த்தை 4 மணி ஆனால் கேட்பேனே
இனி எப்போது மகளே கேட்பேன்?
ஐந்தாம் திகதி ஆனால்
கேட்காமல் எனக்கு காசு அனுப்புவாய்
மகளே நான் இப்போது உன்னிடம் காசு கேட்கிறேன் இனி
எப்போது மகளே அனுப்புவாய்? என் அன்னுத் தெய்வமே
உன் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரி புலம்பல்

பாசத்திற்கு அன்பு காட்டிய
வனிதா நீ எங்கேயம்மா சென்று விட்டாய்?
நீ இதற்காகவா கடல் கடந்து என்னிடம்
அக்கா என்னும் பாசத்தை அடைய
ஓடோடி வந்தாயே இதற்காகவா ஐந்து வருட காலமாக
எனது மூத்த மகளாக நான் உன்னை வளர்த்து வந்தேனே.
நீ என்னை விட்டு பிரிவதற்காக
நாங்கள் கூட்டுக் குருவியாக இருந்தோம்.
எனது பிள்ளைகளுக்கு அன்பையும் பாசத்தையும்
பொழிந்த தெய்வமே! நீ எங்கே சென்று விட்டாய்
பிஞ்சு மனதில் அன்ரி என்று பெயரை சொல்லி விட்டு
கல்லாக்கி விட்டு மனதை தவிக்கவிட்டு சென்று விட்டாயே.
எங்கள் அன்பு பொக்கிசமான
அக்காவே உனது இரண்டு கண்களும் நீங்கள் தானே
என்று வாய் நிறைய சொல்லுவாய் ஏன் அக்கா
நீங்கள் எங்களை விட்டு பிரிந்தாய்.
நீங்கள் சொல்லும் வார்த்தை எமது
அடிமனதில் ஆலமரமாக பதிந்துள்ளது.
அக்கா எங்களுக்கு அப்பா, அம்மா போல் வளர்த்து வந்தாயே
அப்பா செய்ய வேண்டியது எல்லாம் நீ
எங்களுக்கு கேட்காமலே எல்லாம் செய்வாய்
இனி யாரிடம் அக்கா கேட்பது - எங்களுக்கு
ஆதரவாக இருந்த தெய்வமே - உன்
அழகைப்பார்த்து ரசித்தோம்.
ஆண்டொன்று போக வயதொன்று ஆகும்.
நடந்தவை எதுவும் மனதை விட்டு போனது.
விலை மதிக்க முடியாத சகோதரியே - உன்
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிமார் புலம்பல்

எங்களது செல்ல அக்காவே!

நாங்கள் அக்கா என்று கூப்பிட்டால்

நீங்கள் சொல்லுவீங்கள் - நான்

அக்கா இல்லை உங்களுடைய அம்மா என்று

ஏன் அக்கா எங்களை விட்டு பிரிந்தாய்?

ஏன் உன் செல்லங்களை விட்டு பிரிந்தாய்? - நீங்கள்

இல்லாமல் எங்கள் வீடோ இருள் மயமாக்கி

விட்டு சென்றாயே அக்கா..... - நான்

நான் நல்லாய் இருக்கனும் என்று

என்னை வெளிநாடு வெளிநாடு அனுப்பி வைத்தாயே - அக்கா

உங்களின் குரலை தொலைபேசி மூலமாக கேட்பேன்.

இனி எப்போது கேட்பேன்? - உன்

அன்பு செல்லமே நான் இங்கு தவிக்கின்றேன்.

விதி என்னையும் உன்னையும் விளையாடி விட்டது - நான்

அம்மாவை விட்டு போகிறேன் நீ

அம்மாவுடன் இருக்கனும் என்று - என்னை

அம்மாவிடம் கொண்டு வந்து விட்டது விதி.

அக்காவே உன் ஆத்மா சாந்தி அடைய

இறைவனை வேண்டுகின்றேன்

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தான் புலம்பல்

என் அன்பு மூத்த மகளே வானி

நீ எங்கம்மா சென்றாய்? - உன்னை

மச்சாள் என்று நினைக்காமல் - எனது மகளாக

எங்கள் எதிரே போசனம் அளித்து

உன் குரலை கேட்போம்

இனி எப்போது உனது குரலை கேட்பேன்?

உனக்கு தகப்பனாக இருந்து

திருமணம் செய்து வைக்க இருந்தேனே

கடைசியில் எங்களை கலங்க வைத்து சென்று விட்டாயே

உன் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றேன்

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

## பெரியப்பாமார், பெரியம்மாமார்
## சித்தப்பா சித்திமார்
## புலம்பல்

எங்கள் அன்பு மகளே நீ
எங்கள் குரல் கேட்டவுடன் ஓடோடி வருவாய்
இனி யாரம்மா வருவினம்
வாய் நிறைய பெரியப்ப, பெரியம்மா
சித்தி, சித்தப்பா என்று வாய் நிறைய
கூப்பிடுவாயே எங்கேயம்மா நீ சென்று விட்டாய்
உன் ஆத்மா சாந்திக்காக நாங்கள்
இறைவனை வேண்டுகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமாமார் மாமிமார் புலம்பல்

மருமகள் என்று உன்னை
மனம் நிறைய அழைப்போமே
உனக்கு என்ன பிரச்சினை என்றாலும்
துனிந்து நிற்பீரே
காலையில் எழுந்த உடன் மாமி என்று
ஓடோடி வருவாயே
இனி யாரம்மா வருவினம்?
அழகான சேலைக் கட்டி உன்னை
மகனுடன் அருகில் இருத்தி
பார்க்கும் வேலையில் - உனது
அதிர்ச்சியான செய்தி கேட்டு
மனம் உடைந்து போனோம்
உனது பிரிவு எங்கள் நெஞ்சு வெடிக்குதம்மா
உன் துயரம் எங்கள் மனதை
விட்டு நீங்காது மருமகளே
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றேன்

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

## மைத்துனர் மைத்துனி புலம்பல்

மச்சாள் என்று வாய் நிறைய கூப்பிடுவோமே.

மச்சாள் என்று நினைக்காமல்

நன்பியாகவும், சகோதரியாகவும் நினைத்த எங்கள்

அன்பு மச்சாள் நீ எங்களை

அதிரவைத்து விட்டு எங்கே நீ சென்று விட்டாய்

உனது பிரிவு எங்களை நிலைக்குத்தாக வைத்து விட்டது

மச்சாள் உன் ஆத்மா சாந்தி அடைய

கடவுளை வேண்டுகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராமக்கள் புலம்பல்



தவமாய் தவமிருந்து பெற்றெடுத்த
எங்கள் அம்மம்மாவை தவிக்க விட்டு விட்டீர்கள்.
அன்றி எங்களையும் கண்ணுக்கு கண்ணாய் வளர்த்தீர்களே
கண்ணை இமை காப்பது போல
எங்களை பாசமாய் பார்த்தீர்களே
எங்கள் பிஞ்சுமனதில் அன்பு மழையை
பொழிந்து விட்டு ஏமாற்றி விட்டீர்களே
அன்றி நீங்கள் இல்லாமல் எங்கள்
வீடோ இருள் மயமாய் இருக்குது - அன்றி
நீங்கள் வேலையால் வரும் வரைக்கும்
உங்களுக்காக நாங்கள் காத்திருந்து
சண்டை பிடிக்கும் காட்சியை எங்களால்
மறக்கவும் முடியவில்லை.
ஓடி ஓடி எங்களுடன் விளையாடும் காட்சிகள்
நிழல் போல் வந்து எம் பிஞ்சு மனதை வாட்டி எடுக்கின்றது.
அன்றி நீங்கள் பத்து ரூபாய் தருவீங்கள்.
தொலைபேசி கதைப்பதற்கு இனி யாரிடம் கேட்பது
ஆயிரம் ஆயிரம் காலங்கள் எங்களுடன்
நீங்கள் இருக்க ஆசைப் பட்டோம் ஆனால்
அது பாதியில் முறிந்து விட்டதோ
அன்றி நீங்கள் எப்பவும் எங்களுக்கு
அன்றியாய் வரவேண்டுமென்று
இறைவனிடம் வேண்டுகின்றோம்

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணன்மார் கண்ணீர் புலம்பல்

கூன்டுக் கிளிகளாய் நாம்
கூடி வாழ்ந்தோம்
காலக் கொடுமையால் நாம்
காணாத்தூரம் பிரிந்தோம்
காலனவன் பொடுமையால்
காலமெல்லாம் பிரிந்து சென்றீரோ?
சித்தம் கலங்கி நாம்
நித்தாமும் அழுகின்றோம்
சீக்கிரமாய் நீர் வலுவீரென்று
சின்னக் கனவோடு காத்திருப்போம்.

## அக்காமார் புலம்பல்

எமக்கு ஓர் ஆசை தங்கையாக மட்டுமல்ல
தங்கைக்கோர் ஆசை அன்னையாய் இருந்தாய்
உள் மனதில் உறைந்திருக்கும்
உன் நினைவுகள்............
உறங்கிடுமோ எம் விழிகள்..........

பயந்தால் மனிதன் வாழ முடியுமா?
என்று தினம் நீ கேட்பாய் - அந்த
துணிவு தான் இறுதியில் உன் உயிரை
பறித்ததா சோதரனே!

ஆசை எம் தங்கை நீ இருந்த இடம் இன்று
வெறுமையாக உள்ளது
அன்புத்தங்கை நீ நடந்த பாதை இன்று
கண்ணீர் வடிக்கிறது தினமும்
எம் மனதில் உன்நினைவு மட்டுமல்ல
உள்ளக் குமுறலும்............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

அன்பு ஆண்டவன் அருளில் ஆரம்பமாகிறது.

அன்பு அழகிய வாழ்க்கையின் அடித்தளம்.

அன்பு இணைந்து கொண்டு அணைத்துச்செல்லும்

அன்பு அதிகமாகும் போது மனிதனாகின்றோம்.

அன்பு சகலதயும் தாங்கும் சகலதயும் சகிக்கும்.

அன்பு இருக்குமிடத்தில் அமைதியை காணலாம்.

அன்புள்ள இதயம் அனைத்தையும் அடையும்.

அன்பு நீடிய சாந்தமும், சந்தோவிமும் நிறைந்தது.

அன்பான வார்த்தைகள் ஆத்திரத்தை அடக்கும்.

அன்பு ஆணவம் அற்றது. அதிகாரம் செய்யாது.

அன்புபுள்ள இடத்தில் இன்பம் சுற்றிச் சுற்றி நிற்கும்.

அன்பிலே ஆனந்தமான வாழ்வு பிறக்கிறது.

அன்பு பழிவாங்காது. பாவம் செய்யாது. பண்புள்ளது.

அன்பு ஒரு அர்த்தமுள்ள வார்த்தையை அமைக்கிண்றது.

அன்பு உதவி செய்யாது. உபத்திரமும் கொடுக்காது.

அன்பு நீதியானது நேர்மையானது. நம்பிக்கையுள்ளது.

அன்பு கொடுப்பவரையும், வாங்குபவரையும் பிணைக்கின்றது.

அன்பு பாசமுள்ளது, மோசம் செய்யாது.

அன்பு இளக்கப்படும்போது அத்தனையும் இழக்கப்படுகின்றது.

அன்பு செழிப்பானது, சினம் கொள்ளாது, சந்தேகமற்றது.

அன்பு நுழையும் போது இன்பம் இறுதிவரை இருக்கும்.

அன்பு கலகம் செய்யாது, காலம் பூராவும் காப்பாற்றும்.

அன்பு மூர்க்கம் கொள்ளாது மென்மையானது. மேன்மையுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு அன்யோன்னியமான குடும்ப வாழ்வு குதூகலம் பெறுகிறது

அன்புள்ள இதயம் இழமை இழக்காது. இன்பம் பெருகும்

அன்பு தன்னை புகளாது தற்பெருமை கொள்ளாது மென்மையானது.

அன்பினால் வரும் வார்த்தைகள் அளவற்ற ஆனந்தம் தரும்.

அன்பு இரக்கமுள்ளது. இறுமாப்பாயிராது. இனிது பேசும்.

அன்பு ஆதாரமாகக் கொண்டு அழகிய வாழ்க்கை அமைகின்றது

அன்பிலே பிறந்தாய் வளர்த்தாய் அதன் வழியே வாழ்ந்துகொள்

அன்பை அறிந்தவர்க்கு ஆண்டவன் ஆசீர்வாதம் அமையும்.

பழமொழிகள்

1) மனமிருந்தால் மார்க்கம் உண்டு.
2) பானை பிடித்தவள் பாக்கிய சாலி.
3) ஒருவனுக்கு ஒருத்தி.
4) போகாத ஊருக்கு வழி ஏது.

**உயிரின் சுவாசம், உனக்குள் ஒரு சூரியன், அட்டையிட்ட**

**அமுதம், உனக்கு**

**வரம் வர யாரோ இருந்த**

**தவம்...........புத்தகம் – வைரமுத்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

1.நவீன ஆங்கிலப் பந்தையம் எங்கு தோன்றியது?
இங்கிலாந்தில்

2.Indiah Ink கண்டு பிடிக்கப்பட்டது எந்த நாட்டில்?
சீனா.

3.பாலுக்கு குணத்தை தருவது எது?
குலோபுல்ஸ் என்ற கொழுப்புப்பொருள்

4.இரும்பை விட கடினமான வாயு எது?
ராடான்

5.மண்புழுவுக்கு எத்தனை இதயம் உண்டு?
5 சோடி

6.1kg தேனில் உள்ள சத்து எவ்வளவு?
65 முட்டைகளில் உள்ள சத்து

7.போக்குவரத்து காவலர்களே இல்லாத நாடு எது?
நியூசிலாந்து.

8.உலகிலேயே மிகப்பெரிய மனநல மருத்துவமன எது?
நியூயோக்கில் உள்ள பில்கிரிம்ஸ்டேட் மருத்துவமனை.

9.இந்தியக்காடுகளில் ராஜா எனப்படுவது எது?
தேக்கு மரம்.

10.ராணிக் கறையானின் ஆயுட் காலம் எவ்வளவு?
50 ஆண்டுகள்.

11.ஆசியாவிலுள்ள மிகப்பெரிய உப்பு ஏரி எது்?
ஒரிசா புவனேஸ்வரத்தில் உள்ள சில்கா என்ற உப்பு ஏரி

12.யானை எத்தனை km வேகத்தில் ஓடும்?
சுமார் 48km

13.விமானத்தின் வேகம் எந்த அலகில் குறிப்பிடப்படுகிறது?
மார்ஸ்

14உலகில் மிகப்பெரிய வங்கி எது?
Bank of America

15.ஆகாய விமானத்தில் பயணம் செய்த முதல் அமெரிக்க ஜனாதிபதி யார்?
ரூஸ்வேல்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் தனக்குத் திறமை இருப்பது போல நடிப்பதை எவ்வாறு அழைக்கிறார்கள்?
சார்லேடன்

ஒட்டகமும் சிங்கமும் எவ்வளவு காலம் கருப்பையில் வாழ்கின்றன
ஒட்டகம் - 12 மாதம்
சிங்கம் - 21 மாதம்

கப்பலின் வேகத்தைக் கணக்கிடப் பயன்படும் அலகு முறை யாது?
நாட் என்ற அலகு

முதன் முதலில் சைக்கில் எப்படி அழைக்கப்பட்டது?
ஹாபி ஹோர்ஸ்

உலகில் முதல் கடல் அலை ஆற்றல் நிலையம் எங்கு அமைக்கப்பட்டது?
1966ல் பிரானஸ்

வியாழனின் துணைக்கோளான "இயோ" வின் சிறப்பு என்ன?
இங்கு எரிமலைகள் உள்ளன.

கறையானின் தாய்ப்பூச்சி எவ்வளவு முட்டை இடுகின்றன?
வினாடிக்கு ஒரு முட்டை

ஐக்கிய நாடுகள் சபை எத்தனை மாடிகளை கொண்ட கட்டமாகும்
35 மாடிகள்

யானை தன் துதிக்கையால் எவ்வளவு எடையை தூக்கும்?
ஒரு டன் எடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசி இலக்கம்

**வவுனியா மாட்டம்**

| | |
|---|---|
| 1.கச்சேரி | 024 2222234 |
| 2.பிரதேச செயலாளர் | |
| வவுனியா தெற்கு | 024 2222238 |
| 3.நீதி மன்றம் | 024 2222291 |
| 4.பொலிஸ் நிலையம் | |
| 5.மின்சார சபை | 024 2222285 |
| 6.கல்வித்திணைக்களம் | |
| வவுனியா வடக்கு | 024 2221513 |
| வவுனியா தெற்கு | 024 2222373 |
| 7.வங்கிகள் | |
| மக்கள் வங்கி | 024 2222378 |
| செலான் வங்கி | 024 2222633 |
| சனச வங்கி | 024 2224312 |
| இலங்கை வங்கி | 024 2222220 |
| கொமர்சல் வங்கி | 024 2222103 |
| கற்றன் நஷனல் | 024 2222586 |
| 8.பல்கலைக்கழகம் | 024 2222265 |
| 9.கல்வியல்கல்லூரி | 024 2222272 |
| 10.தபால்கந்தோர் | 024 2222250 |
| 11.புகையிரத நிலையம் | 024 2222271 |
| 12.தொழில்நுட்பகல்லூரி | 024 2222664 |
| 13.ப.நோ.கூ.ச. | 024 2222384 |
| 14.S.L.R.C (வாகனம்) | 024 2241773 |
| 15.விவசாயத்திணைக்களம் | 024 2222324 |
| 16.பேரூந்து நிலையம் | 024 2223481 |
| இ.போ.சபை | 024 2223449 |

நல்ல நண்பனைப் பெறுவதற்கு நிலைக்கண்ணாடி தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான்றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள் வாழ்க
ஏகன் அநேக னிறைவ னடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க

ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பன்யான்

கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியா
யெண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்து ளோங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே

ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகு
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பருக்கு எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெரமான் வல்வினையேன்றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாயாய் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள்புரிந்த நெஞ்சில்வஞ் சங்கெட
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துண்ணிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார்தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமென் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லியபாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கௌரிகாப்பு

### விநாயகர் துதி

*முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு*
*என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்*
*சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்*
*எக்குற்றமும் வாராமற்கா.*

**வேண்டுதற் கூறு**

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிஷாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்மைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
Kத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு

0980

12

05



இறப்பு

2010

07

08

இலங்கை யாழ் மாநகரின் தச்சத்தோப்பை பிறப்பிடமாகவும் வவுனியாவை வதிவிடமாகவும் பிரான்சில் தற்போது வசித்து வந்தவருமாகிய அமரர் செல்வி கனகரத்தினம் சத்தியவனிதா 08.07.2010 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்

அன்னார் அமரர் கனகரத்தினம் கைலாசபதியார் அன்பு மகளும் வதனா (பிரான்ஸ்) அமரர் துசி சுமிதா ரங்கன் (பிரான்ஸ்) ஜீவிதா ராஜ ஆகியோரின் பாசமிகு சகோதரியும் உதயராசா (கரன் பிரான்ஸ்) மைத்துணியும் உசானி, உமேஷ், உசான் (பிரான்ஸ்) அன்புமிகு சிறிய தாயும் ஆவார். அன்னாரின் இறுதி கிரியைகள் 22.-07.20 வியாழக்கிழமைக் காலை 11 மணி முதல் 2 மணிவரை (REMATORIUM DU PERE LACHAISE PARIS) என்னும் முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிரான்சில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தல்களை அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
05.12.1980

மறைவு
08.07.2010

யாழ்ப்பாணம் தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும்,
வவுனியா தோணிக்கல்லை வதிவிடமாகவும்,
தற்போது பிரான்சை வாசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## செல்வி. கனகரட்ணம் சத்தியவனிதா

உறவுகள் துடிதுடிக்க
பாதி வழியில் பயணத்தை முடித்து
பாரினிலே நீ மறைந்து விட்டாய் சத்தியா
நம் காதில் கேட்ட செய்தி
பொய்யாகாதா?
ஒரு தரம் கண் பார்க்காயா ?
இனி எங்கு காண்போம் வனிதா
உன் போன்ற பொக்கிஷத்தை.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்
அப்பன் (சித்தப்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்ச விருட்சம்

அமரர் நாகேசு + தையல் நாயகி
அமரர் சடாசிவம்
அமரர் ரெத்தினம் + ஜயாத்துரை
அமரர் கனகரத்தினம் <——
துரைசிங்கம் + சரசு (இலங்கை)
தியாகராசா + தேவி (பிரான்ஸ்)
தியாகபதி + சிவபாலன் (இலங்கை)
தியாகபதி + ராதாகிருஷ்னன் (சுவீடன்)
அமரர் தில்லைநடேசு + செல்வி (இந்தியா)
அமரர் திருஞானம்
திருலோகசிங்கம் + லட்சுமி (பிரான்ஸ்)

மயில்வாகனம் + நாகலட்சுமி
——> கைலாசபதி
மங்கலேஸ்வரி + கிருஸ்னமூர்த்தி (இலங்கை)
அமரர் தவநாயகி
விக்கினேஸ்வரி + ஆனந்தன் (லண்டன்)
கனகேஸ்வரன் + மங்களேஸ்வரி (இலங்கை)
கனகேஸ்வரி + இராசரத்தினம் (இலங்கை)
சோனேஸ்வரி + சுரேஸ் (இலங்கை)

சத்தியவதனா
+
உதயராஜா
உஷானி
உஷான்
உமேஸ்
(பிரான்ஸ்)

அமரர் துசி

அமரர்வனிதா

சுமிதா

ரங்கன்
+
நிஷா
(பிரான்ஸ்)

ஜீவிதா

றாஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்



எமது அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய் எம்மோடு
வாழ்ந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திய

எமது குடும்பத்தின் குள விளக்கு
அமரர்
**செல்வி கனகரத்தினம் சத்தியவனிதா**
அவர்களின்

மரண செய்தி கேட்டு உடன் வந்து துயரில் கலந்து கொண்டு மரணக் கிரியை நிகழ்வின் போது பல வகையிலும் உதவியோர்க்கு நோயுற்ற வேளையில் வைத்திய உதவி புரிந்த வைத்தியர்களிற்கும் தொலைபேசி தொலைநகல் மூலம் அனுதாபம் தெரிவித்ததோர்க்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார் உறவினர் ஆகியோருக்கும் மற்றும் இம்மலரை அழகுர அமைத்து வடிவமைத்து தந்த சுபாஸ் அச்சகத்தாருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம்

குடும்பத்தினர்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை நீ இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்? அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருக்கிறாய் அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ அது இங்கேயே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.

இந்த மாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

சுபாஸ். அச்சகம், வவுனியா. 024 2225519

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org